**செய்தி வெளியீடு எண் : 1430** **நாள் : 18.08.2022**

## செய்தி வெளியீடு

2022 ஆகஸ்ட் மாதம் 22 முதல் 26 வரை கனடா நாட்டின் ஹாலிபேக்ஸ் நகரில் நடைபெறவிருக்கும் 65-வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் தமிழக கிளையின் பிரதிநிதியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் கலந்து கொள்கிறார். முனைவர். கி. சீனிவாசன், சட்டமன்ற செயலாளர் அவர்கள் இம்மாநாட்டில் நடைபெறும் Society of Clerks at-the-Table (SOCATT) கூட்டங்களில் கலந்துகொள்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், செயலாளர் அவர்களும் மேற்குறிப்பிட்ட மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 18.08.2022 (வியாழக்கிழமை) இன்று இரவு 9.45 மணிக்கு எமிரேட்ஸ் விமானம் (EK 547) மூலம் துபாய் சென்று அங்கிருந்து சான் பிரான்சிஸ்கோ நகருக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, பின்பு ஹாலிபேக்ஸ் நகருக்கு சென்றடையவுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், செயலாளர் அவர்களும் மேற்குறிப்பிட்ட மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு 01.09.2022 (வியாழக்கிழமை) இரவு 08.30 மணியளவில் எமிரேட்ஸ் விமானம் (EK 546) மூலம் சென்னை வந்தடைகிறார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in